தஞ்சை மத்திய மாவட்ட மாநகர - ஒன்றிய - பகுதி -

# பேரூர்க் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், பிப்.14 -

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது குறித்து மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகங்களில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளதாக தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் வருகின்ற 1.3.2025 அன்று உலகெங்கும் உள்ள திராவிட சொந்தங்களால் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

அந்த வகையில் தஞ்சாவூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநகரம், ஒன்றியம், பகுதி மற்றும் பேரூர் கழகங்கள் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் அந்தந்த அவைத்தலைவர் தலைமையில் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

நாளை (15.02.2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் தஞ்சாவூர் மாநகர தி.மு.க. 17.2.2025 திங்கள்கிழமை மாலை 05.00 மணிக்கு, தஞ்சை கலைஞர் அறிவாலத்தில், கோட்டை பகுதி, மாலை 6.00 மணிக்கு, கண்டியூர் கே.டி.ஏ.ராஜா மஹாலில், திருவையாறு தெற்கு ஒன்றியம்.

18.02.20245 செவ்வாய் காலை 10.00 மணி தெக்கூர் பல்நோக்கு சேவை மையம், கோனூர்நாட்டில் ஒரத்தநாடு மேற்கு ஒன்றியம், மாலை 05.00 மணிக்கு ஊரணிபுரம் சித்தி விநாயகர் திருமண மண்டபத்தில், திருவோணம் வடக்கு,

19.02.2025 புதன் மாலை 04.00 மணிக்கு மேலத்திருப்பூந்துருத்தி, அரண்மனை வளைவு சமுதாய கூடத்தில், மேலத்திருப்பூந்துருத்தி பேரூர், மாலை 5.00 மணிக்கு தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் கீழவாசல் பகுதி,

20.02.2025 வியாழன் காலை 10.00 மணிக்கு, காசவளநாடு கோவிலூர் திருமண மண்டபத்தில் ஒரத்தநாடு வடக்கு ஒன்றியம். மாலை 05.00 மணிக்கு, தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் கரந்தை பகுதி,

21.2.2025 வெள்ளி காலை 10.00 மணிக்கு ஒரத்தநாடு எம்.ஆர்.திருமண மண்டபத்தில் ஒரத்தநாடு கிழக்கு ஒன்றியம், மாலை 05.00 மணிக்கு, தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் தஞ்சை மருத்துவக்கல்லூரி பகுதி,

22.02.2025 சனி காலை 10.00 மணிக்கு தஞ்சை மாரியம்மன்கோவில் சி.எஸ்.ஜி.எஸ். திருமண மண்டபத்தில், தஞ்சை கிழக்கு ஒன்றியம். மாலை 05.00 மணிக்கு செங்கிப்பட்டி ஓவியா திருமண மண்டபத்தில், பூதலூர் தெற்கு ஒன்றியம். மாலை 06.00 மணிக்கு ரெட்டிப்பாளையம் ஆறுமுகம் மஹாலில் தஞ்சை மேற்கு ஒன்றியம்.

23.02.2025 ஞாயிறு காலை 10.00 மணிக்கு திருக்கானூர்பட்டி நீலா மஹாலில், தஞ்சை தெற்கு ஒன்றியம். மாலை 03.00 மணிக்கு திருவையாறு புஷ்ப மண்டபத்தெரு காவேரி திருமண மண்டபத்தில், திருவையாறு பேரூர். மாலை 05.00 மணிக்கு திருக்காட்டுப்பள்ளி எம்.வி.கே.திருமண மண்டபத்தில் பூதலூர் வடக்கு ஒன்றியம்,

24.02.2025 திங்கள் காலை 10.00 மணிக்கு பாப்பாநாடு சுகி திருமண மண்டபத்தில் ஒரத்தநாடு தெற்கு, மாலை 05.00 மணிக்கு ஒரத்தநாடு எம்.ஆர். திருமண மண்டபத்தில் ஒரத்தநாடு பேரூர்.

25.02.2025 செவ்வாய் காலை 10.00 மணிக்கு தஞ்சை சிங்கபெருமாள் குளம், மணிரெத்தினம் மஹாலில், தஞ்சை வடக்கு. மாலை 05.00 மணிக்கு வல்லம் பேரூராட்சி திருமண மண்டபத்தில் வல்லம் பேரூர். மாலை 06.00 மணிக்கு திருக்காட்டுப்பள்ளி எம்.வி.கே. திருமண மண்டபத்தில் திருக்காட்டுப்பள்ளி பேரூர்.

26.02.2025 புதன் மாலை 05.00 மணி திருவையாறு புஷ்ப மண்டபத்தெரு காவேரி திருமண மண்டபத்தில் திருவையாறு வடக்கு ஒன்றியச் செயற்குழு கூட்டமும் நடைபெற உள்ளது.

மேற்கண்ட கூட்டத்தில் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றியம், பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலக கூட்டரங்கில் சொத்து வரி மேல்முறையீட்டு குழுக் கூட்டம் வடக்கு மாநகரச் செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி, துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், துணை ஆணையாளர் சுந்தரராஜன் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கத்தில்

# பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## கீரமங்கலத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, பிப்.14 -

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அறிவொளி நகரில், பள்ளிக்கல்வித்துறை சார்பில், வளமிகு வட்டாரங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், பள்ளி மாணாக்கர்கள் தினந்தோறும் பள்ளிக்குச் சென்று வரும் வகையில் வாகன வசதி சேவையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 12.02.2025 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு அரசின் மாநிலத்திட்டக் குழுவின் சார்பில் செயல்படுத்தப்படும் வளமிகு வட்டாரங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருவரங்குளம் மற்றும் கறம்பக்குடி ஆகிய ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் சிறப்பம்சமாக அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் வருகையினை அதிகப்படுத்துதல், இடைநிற்றலைத் தவிர்த்தல், அறிவியல் மனப்பான்மையினை வளர்த்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

அதன்படி, முதல்கட்டமாக மாணவ, மாணவிகளின் அறிவியல் ஆர்வத்தினை தூண்டும் வகையில் திருவரங்குளம் மற்றும் கறம்பக்குடி ஆகிய ஒன்றியங்களைச் சேர்ந்த அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 350 மாணவ, மாணவிகள் மற்றும் 44 வழிகாட்டி ஆசிரியர்கள் ஆகியோர் திருச்சி அண்ணா கோளரங்கம்,



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து, திருவரங்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட சுக்கிரன் குண்டு, அறிவொளி நகர் ஆகிய பகுதிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளின் இடைநிற்றலைத் தவிர்க்கும் வகையில் அப்பகுதியினை சேர்ந்த மாணவ, மாணவிகள் தினந்தோறும் பள்ளிக்கு செல்லும் வகையில் வாகன வசதி சேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 6 மாதங்களுக்கு வாகன வாடகை கட்டணமாக மாதம் ரூ.50,000 வீதம் ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனம் காலை சுக்கிரன்குண்டு, அறிவொளி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள மாணவ, மாணவிகளை வாகனத்தில் ஏற்றி அப்பகுதியில் உள்ள எல்.என்.புரம் அரசு மேல்நிலைப்பள்ளி, புளிச்சங்காடு, கைகாட்டி அரசு தொடக்கப்பள்ளி, கீரமங்கலம் வடக்கு அரசு தொடக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளில் இறக்கி விட்டு மாலையில் அதேபோன்று மாணவ, மாணவிகளை ஏற்றி மாணவ, மாணவிகளுக்குரிய குடியிருப்பு பகுதியில் இறக்கி விடப்படுவார்கள். மாணவ, மாணவிகளை பாதுகாப்பாக அழைத்து செல்ல வாகனத்தில் உதவியாளர் ஒருவரும் உடன் இருப்பார்.

எனவே, மாணாக்கர்கள் அனைவரும் இதுபோன்று செயல்படுத்தப்படும் திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு கல்வியில் சிறந்து விளங்கி, உயர்ந்த நிலையினை அடைந்திட வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், முதன்மை கல்வி அலுவலர் கூ.சண்முகம், கீரமங்கலம் பேரூராட்சித் தலைவர் கே.சி.சிவக்குமார், மாவட்ட திட்டமிடும் அலுவலர் இளங்கோ தாயுமானவர், அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் ஜெயந்தி, முதன்மைக் கல்வி அலுவலக நேர்முக உதவியாளர்கள் முருகையன், வெள்ளைச்சாமி, மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர். சாலை செந்தில், பள்ளித் துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குரு மாரிமுத்து, திருவரங்குளம் வட்டாரக் கல்வி அலுவலர்கள் தனராணி, கருணாகரன், கவிதா மற்றும் ஞான.இளங்கோவன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஞான கலைச்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி, செல்வபுரம் பகுதி கழகம் 77வது வட்டத்துக்கு உட்பட்ட கழக உடன்பிறப்பு மும்தாஜ் தம்பிக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி நிதியுதவி வழங்கினார். உடன் தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளரும், திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான ஈ.தங்கராஜ், செல்வபுரம் பகுதிக் கழகச் செயலாளர் கேபிள் எஸ்.மணி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சிவக்குமார், (செல்வபுரம் பகுதிக் கழக தேர்தல் பொறுப்பாளரும், வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளருமான ஏ.கே.வேலுச்சாமி, தொழிற்சங்கம் பிரபாகரன், வட்டக் கழக துணைச் செயலாளர் பஷீர், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தளபதி தியாகு உள்ளிட்ட பலர் உள்ளனர்.


